ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

का ते कान्ता कस्ते पुत्रः संसारोऽयमतीव विचित्रः ।
कस्य त्वं कः कुत आयातस्तत्त्वं चिन्तय तदिदं भ्रान्त ॥५॥

ते—உன்னுடைய
कान्ता—ஸ்திரீயானவள்
का—எவள்.
ते—உன்னுடைய
पुत्रः—புதல்வன்
कः—எவன்.
अयं—இந்த
संसारः—ஸம்ஸாரமானது
अतीव—மிகவும்
विचित्रः—ஆச்சரியமானது
त्वं—நீ
कस्य—எவனுடையவன்.

त्वं—நீ
कः—யார்.
त्वं—நீ
कुतः—எங்கிருந்து
आयातः—வந்தாய்.
हे भ्रान्त—சித்தஸ்வாதீனமில்லாதவனே
तत् इदं—இங்கு கூறப்பட்ட விஷயசம்பந்தமான
तत्त्वं-உண்மையானஸ்வரூபத்தை
चिन्तय-நன்குஆலோசனைசெய்.

முன் சுலோகத்தால் புத்திராதிகளுடைய பரித்யாகமானது கூறப்பட்டது. இதினால். தத்வதிருஷ்டியில் புத்திராதிகளே இல்லை என்று நிரூபிக்கப்படுகின்றது. உன் ஸ்திரீ என்று நீ அபிமானிக்கும் வஸ்துவில் ரக்தம் வஸை, மாம்ஸம், மூத்திரம், புரீஷம், மேதஸ் முதலானவைகளுடன் கூடிய மாம்ஸபிண்டத்தைத் தவிற வேறு ஒன்றும் இல்லை. புத்திரனென்று அபிமானிக்கும் பதார்த்தத்திலும், சோணித சுக்லங்களுடைய பரிணாமத்தைத் தவிர்த்து வேறொன்றுமில்லை. இவைகள் யாவும், கனவிற் கண்ட ஸ்திரீபுத்திரர்களுக்கொப்பாகும். இவ்விதம்அநித்தியமாயிருக்கிற இவைகளில் நித்திய புத்தியைக் கொடுப்பதால், இந்த ஸம்ஸாரமானது மிகவும் ஆச்சரியமானது. நன்கு விசாரித்தால் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமே இல்லை. நீ யாருடையவன் நீ என்று சொல்லுகிறவன் யார், நீ எங்கிருந்து வந்தாய் ஹே, பிராந்த உண்மையையறியாமல் சுற்றும் மனத்தையுடையவனே; இங்கு கூறப்பட்ட இவ்விஷயங்களேமாயா விலாஸமென்று நிச்சயமாயறிந்து தத்வம் விசிந்தய உபாதியற்றதாயும், நித்தியமாயும், ஆனந்தஸ்வரூபமாயும் விளங்கும் பரஞ்ஜோதி ஸ்வரூபத்தை அறியமுயற்சிசெய், வீணில் மாயிகமானஸம்ஸாரத்தில்ஆசைகொண்டுஇம்மானிடப் பிறவியைப்பயனற்றதாகச்செய்யாதே என்று குரு சிஷ்யனுக்குபதேசிக்கின்றார்

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

௧௯௰-ஹூ ஆனி-மீ ௧௨-உ

## இக்காலத்திற்கு அவசியம் வேண்டியது யாது?

(௨௮௬-வது பக்கத்தொடர்ச்சி)

மூவித ஒற்றுமைகளும் உபந்நியாசத்தால் இன்றியமையாதென்று முன்னெடுத்துக் காட்டினேமல்லவா? அதற்கு இன்னும் பல காரணங்களுண்டு. அவையாவன:— இத்தேசத்தில் குருவெனப் புகழ்பெற்றவர்கள் ஸ்ரீ சங்கராசாரியார் முதலாயினோரென்பது நீவிரறிந்ததேயாம். அவர்களை வழிபடுவதே பரமதர்மமெனவும், அஃதே முத்தியளிக்குமெனவும், இக்காலத்தவர் சிலரும் நம்புகிறார்கள். இதனைச் சற்று கவனிக்குங்கால் இதற்குக் காரணமாயிருப்பது அக்குருவின் நா வலிமையே. அவர்கள் தமது திருவாக்காகிய ஆயுதத்தாலல்லவோ துர்மதப் பைசாசு பிடித்த மற்றவர்கோட்பாடுகளை வேர் களைந்தார்கள். அதுகொண்டே அவரிலும்முன்னோர் அனேகர் அவ்வம்மதங்களுக்கு ஆசிரியர்களாயிருந்தும், கேட்பவர் உள்ளங்குளிர உபந்நியசித்து அவ்வக்கோட்பாடுகளுக்கேற்பப் புத்தகங்களை எழுதி வைத்தனராதலாலும் அக்காலத்து நாத்திகர் முதலிய ஏனைய மதஸ்தர்களை வென்றாராதலாலும் அவருக்கு ஓர் பெரும் புகழ் விளைந்தது. மதாசாரியார் என்னும் பெயரும் வெளிவந்தது. முற்காலத்தில்இத்தேசத்தில் பௌத்தமதம் விர்த்தியானதும்; எத்தேசத்திலும் உபந்நியாச வலிமையாற்றானென்பதற்கு ஐயமில்லை. ஏனெனில் சுத்தோதனனென்னும் ஓர் மகாராஜனின் அரும்புதல்வரான சாக்கியமுனி என்பவர் தாம் அரசனாயினும் அப்பெருமை பாராட்டாது வெளிவந்து பலவிடங்களிலுந் தமது கொள்கையை உபந்நியசித்து வெளிவந்தாராதலால், அவர் மதத்தைப் பலர் கைக்கொண்டார்கள், அவ்விதம் விர்த்தியடைந்த அம்மதத்தை இத்தேசத்தினின்று அகற்றலது "உஷ்ணத்தை உஷ்ணத்தால் மாற்று" என்றபடி அதே

வழியால் மாற்றவேண்டுமென்று எண்ணிய ஸ்ரீசங்கரமுனி முதலாயினோர்களும் அவ்வழியே கொண்டனர்கள். ஆதலால், நம்மவர்க்கு எல்லாவிஷயத்திலும் சபைகளும், சபாநாயகர்களும் வேண்டுவது ஆவசியகம் என்பது ஸ்மிருதிகளின் இரகசியங்களைக் கற்றுணர்ந்த பண்டிதர்கள் அறிந்த விஷயமே. இந்துக்கள் செய்யும் ஒவ்வொரு கருமத்தின் தொடக்கத்திலும், ஸதஸ்ஸுக்கு நமஸ்காரம் செய்வதும், புகழ்பெற்ற ஒருவனை சபைக்கு நாயகனாக வரித்தலும், பொருள் கொடுக்கத்தக்க மந்திரம் மாத்திரம் தற்காலத்திலுள்ளவர்கள் சொல்லிவருகிறார்கள். சபைகளும் சபைத்தலைவர்களும் கூடுவது அலங்காரத்திற்கல்லவே. தம்முள்ளத்திற்றோன்று மபிப்ராயங்களை வெளியிட்டு அதனைப்பலரு மறிந்து அநுஷ்டிக்கச் செய்தலல்லவோ அதன் கருத்து. இக்காலத்திலுள்ள நம் இந்து தேசத்தவர்கள் இவ்விஷயத்தில் சற்றுங்கவனியாது ஒவ்வொரு கருமங்களிலும் சபையென்னும் பொருள்படத்தக்க ( परिषत् ) என்னும் பதத்தை மரியதைக்கு மட்டில் சொல்லுகிறார்கள். இதுவும், சில ஜனங்கள் பெரியோர் எழுதிய நூல்களின் பயனறியாது, அப்புத்தகத்திலுள்ள எழுத்துக்கள் இத்தன்மையெனத் தாமும் பாராது, பிறர்க்குங் கொடுக்காது, அவற்றைப் பூஜையில் வைத்துப்பூணூற் கயிற்றினாற் கட்டிப் புட்பதூப தீபங்களால் பூஜித்து வருதல் போன்றதே. இத்தேசத்தில் இவ்வுபன்னியாசமென்னும் வழக்கம் தொன்று தொட்டுள்ளதென்பதற்குத் தகுந்தப் பிரமாணமாய் ஸ்ரீ ராமாயணம், அவ்வம்மதாசாரியார் சரித்திரம் முதலியவற்றை எடுத்துக் காட்டினோமல்லவா? அவ்விதமே, இத்தேசத்திலுள்ள ஆலயங்கடோறும் சபாமண்டபமென்று ஓர் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் அம்மண்டபம் ஏற்பட்ட நோக்கத்திற்கு விரோதமாய்ப் பலஆலயங்களில் அவ்விடம் சிற்றுண்டிகள் விற்குமிடமாக வாடகத்திற்குக் கொடுக்கப்படுகின்றது. அந்தோ! இந்துக்களின் குலத்திற் பிறந்தும் மேன்மை தங்கிய புராணங்களிற் புகழப்பதம் பெற்றும் முக்கிய சித்திரஸ்தானமாய் அனேக சிவாலய விஷ்ணுவாலயங்களுக்குத் தருமபரிபாலனத் தொழிலைக் கைக்கொண்டுமிருக்கும் சிலர், ஆலயத்திற்கு ஏதோ பணம் சேர்க்கவேண்டுமென்று கருதி அவ்விடத்தை ஏற்பட்ட நோக்கத்

திற்குமாறுக வேறுகாரியத்திற்கு உபயோகித்து வருகின்றார்களே, கற்றுணர்ந்த சுதேச பண்டிதர்களே! ஆகமங்களில் சபாமண்டபங்கள் சிற்றுண்டிக் கடைகளுக்காக ஏற்பட்டனவோ? வித்தியா பிரதிஷ்டையன்றோ அவ்விடத்திற் செய்யற்பாலது, இக்காலத்தில் எந்த இந்து தேவாலயத்திலேனும் அக்கருமம் நிறைவேறி வருகின்றதா? அந்தோ! இஃதென்ன விபரீதம்!! இதற்குக் காரணம் இத்தரும பரிபாலனஞ் செய்பவர்களுக்கு நல்லறிவில்லாக் குறையே யொழிய வேறென்னையுளது, ஒரு சமயம் உபயோகப் படினுமோ, என்சொல்வோம்.! உபயோகமற்ற வேசியர்களின் கூத்துகளுக்கும், மற்ற ஏதேதோ விஷயங்களுக்குமே விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நாம் அறிந்த மட்டில் நம் முன்னோர்கள் லௌகிககாரியங்களிலும், வைதிக காரியங்களிலும் சபைகளை முற்கொண்டு தம்முள்ளத்திற்றோன்றிய தாற்பரியங்களைப் பிரசங்க வாயிலாக நிறைவேற்றினார்கள். ஆதலால் இந்து சகோதரர்களே! நம் முன்னோர்க்குக் குலதனம் நூலறிவென்றறியுங்கள்; உங்கள் நுண்ணறிவின் வலிமையை வெளியிடுங்கள்; ஆங்காங்குச் சபைகளைச் சேருங்கள்; விடாமுயற்சியைக் கைக்கொள்ளுங்கள்; ஐயமச்சமின்றி உமதப் பிராயங்களை வெளியிடுங்கள்; உள்மதச்சண்டைகளை ஒழியுங்கள்; மேற்றிசைப் பாதிரிமார் விதண்டாவாதங்களை அகற்றுங்கள்; உங்களாலியன்ற மட்டும் ஆங்காங்குச் சபைகளை நிலைநாட்டுங்கள்; ஆலயங்களோடுமுள்ள சபாமண்டபங்களை வீணாக்காதீர்கள்; எம்போலிகள் வார்த்தைகளுக்குஞ் செவிசாயுங்கள்; வீணிற்காலத்தைப் போக்காதீர்கள்; நமது முயற்சிக்குக்காலம் நேர்ந்ததாக எண்ணுங்கள்; உங்கள் முயற்சி கைகூடப் பரம கிருபா நிதியான பரமன் அருள் புரிவாராக.

உபபத்திராதிபர்.

---

# அத்வைத மதஸ்தர் நிலை.

ஆதி சங்கர பகவத்பாதாள் ஈச்வராவதாரமாகத் தோன்றி செய்தற்கரிய வேலை செய்து எல்லோரும் போற்றும் அத்வைதாமிருதத்தைக் கடைந்தெடுத்து ஸம்ஸார ஹாலாஹலமுண்டோரு

க்கு அளித்து மறைந்தார். இதுகாலை அத்வைத ரக்ஷணார்த்தம் தோன்றிய மடங்கள் பலவிருக்கின்றன. ஏனைய மதத்தினர் தத்தம் மதக்கொள்கையைக் கொஞ்ச அளவேனுமறிந்து மதாசாரியாள் சரிததத்தையறிந்து எள்ளளவேனும் மத ஸம்பிரதாயத்தைத் தழுவிவர அத்வைதிகளோ யார் அத்வைதி என அறியமுடியாமலிருப்பது வருந்தத்தக்கது. அத்வைதக் கொள்கை என்பதென என்று எங்ஙனமறியப்போகின்றனர் ? அத்வைதாசாரியரின் அரும் பெரிய முயற்சிகளையும் அன்னவரது உத்தமோத்தமமான நூல்களையும் ஆதரிப்பவர் எத்துணைபேர் ? பொதுவாகக் கூறுமிடத்து ஸ்மார்த்தரெனப்படுவோரனைவரும் அத்வைதிகளேயாவர். தங்கள் மதாசாரியர் கொள்கைகளையும் ஸம்பிரதாயத்தையும், தினசரி வாழ்க்கையில் நினைக்கவாவது வேண்டாமா ? தங்கள் மதாசாரியாள் பீடத்தைத் தங்கள் ஆயுள் நாளில் ஓர்முறையேனும் தர்சிக்க வேண்டாமா ? இச்சிந்தையற்ற புண்யவான்கள் ஓர்புறமிருக்க அபிமானிகளுக்கேற்ற ஸம்பிரதாய வழி காணாதது மிகமிக வருந்தத்தக்கது. ஆதலால் அத்வைத மதாசாரியார்பீடங்களிலிருந்து சுருக்கமாக ஆதி குருவின் சரிதம். அத்வைதக் கொள்கை குறைந்த பக்ஷம் அத்வைதிகளனுஷ்டிக்க வேண்டிய முறைமை. தினசரி வாழ்க்கையில் எவ்வெவ்வநுஷ்டானம் அத்வைதத்தைத் தழுவியதென்பவைகளை கீர்வாணத்திலும் அந்தந்த தேசியபாஷையிலும் பிரசுரித்து அல்ப விலைக்கு சிஷ்யர்களுக்களிக்கும்படி ஸாஷ்டாங்க ப்ரணாமத்துடன் வேண்டுகிறேன்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

# ஹிந்துமத அனுஷ்டானம்.

262-ம் பக்கத் தொடர்ச்சி.

சங்கர பகவத் பாதா முதலிய அவதார பூதர்களான ஆசார்யர்களும் அதை விரித்து விவரிப்பதையே தமது அவதாரத்தின் முக்கிய நோக்கமென்றெண்ணிப் பாஷ்யமியற்றினர். அதைப் பாரா

யணம் செய்தாலே ஸமஸ்த புருஷார்த்தம் கிட்டுமென்றும் அதனாலேயே ஸமஸ்த வேதங்களைப் பாராயணம் செய்தபலன் கிட்டிவிடுமென்றும் அக்காலம் தொட்டு இந்து மதஸ்தர்கள் உபதேசம் செய்து கொண்டு ஜன்ம ஸாபல்யத்தின் பொருட்டுப் பாராயணம் செய்கின்றனர். இவ்விதமெல்லாம் பலவாறு ஹிந்து மதத்திற்கு சுவாஸக்குழாயாய் இருக்கும் கீதையை எளிதாய் கீதை முதலிய எந்தக்கிரந்தத்தையும் ஆதாரமாய்க் கொண்டிருக்கவில்லையென்றும் தனிவழியைக் காட்டுகிறதென்றும் பறை சாற்றிவிட்டார். கீதை தனிவழியைக் காட்டவில்லை. நமது வேதங்களில் கண்ணியமாய் அரசன் ஆணைபோல் கூறியிருக்கும் விஷயங்களையே எளிய நடையில் அழகாய்க் கூறியிருக்கிறது. அதில் வேதத்திற் போல் கர்மகாண்டம், உபாஸனாகாண்டம், ஞானகாண்டமென மூன்று பிரிவுடன் காண்பிககப்பட்டிருக்கிறது. ஆகையால், கீதைக்கு ஸமானம் நமது மதத்திற்கு ஆணிவேர் வேறொன்றுமில்லையென்பதை ஆஸ்திகர் யாவரும் கொண்டிருப்பதை இது ஒரு போதும் மாற்றாது. தனி வழியைக் காட்டுகின்றதென்றால் இந்து மதத்தைக் காட்டிலும் தனிவழியா அவ்விதமாயின் இந்து மதத்தை அது சார்ந்ததல்லவென்றாகாதா ? அவ்விதமாயின், இந்து மதத்தோர் அதைக் கையாளுவாரா? என்பதை நன்கு ஆராய்ந்து பாருங்கள். ஆகவே, இக்கூற்று எந்தமட்டில் நிலை பெறுமோ ஆசார அநுஷ்டானங்கள் அதனால் பாதிக்கப்படவில்லையாம். இதனால் இந்து மதத்திற்கு ஆசார அனுஷ்டானம் தனியென்பதை ஒப்புக்கொண்டதாய். ஆயிற்று இம்மட்டிற்கு ஸந்தோஷம். ஒவ்வொரு மதத்திற்கும் ஆசாரனுஷ்டானம், ஜீவன் என்பதை யாவருமறிவர். அடுத்து இந்துமதம் கங்காநதியைப் போல் உத்பத்திஸ்தானத்தில் பரிசுத்தமாகத் தான் இருக்கிறது, ஆனால் இடைவழியில் அசுத்தங்கள் கலந்து விடுகின்றன. மொத்தத்தில் பார்த்தால் கங்காநதியைப் போல் ஹிந்து மதம் நன்மையே பயக்குகின்றது. என்கிறார். ஹிந்து மதம் உத்பத்திஸ்தானத்தில் சுத்தமாய் இருக்கிறதென்றால், இதன் உத்பத்திஸ்தானம் எது. நமது மதம் அனாதியாயினும் உத்பத்திஸ்தானத்தை கங்கைக்குப் போற் கற்பித்துக் கொண்டாலும் பகவானிடத்திலிருந்து தான் உண்டாயிற்று. ஆகவே, பகவான் சுத்தரென்று சொல்லுகிறார். கங்கைக்கு இமயமலை உத்பத்திஸ்தானமென்று நாம் கொள்வதில்லை.

கங்கை பிரகாசித்தவிடம் என்று தான் ஒப்புக்கொள்கிறோம். ஆகவே, கங்கையின் உத்பத்திஸ்தானம் பிர்மலோகமோ அல்லது விஷ்ணுபாதமோ அது சுத்தம் தான். பிறகு இமயமலையையும் சுத்தமெனலாம். அதுபோல் நம்மதத்தைப் பிரகாசப்படுத்திய நம்மகரிஷிகளும் சுத்தர்கள்தான் பிறகு நடுவழியில் அசுத்தங்கள் கலப்பது கங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுபோல் நம்மதத்திலும் அநேக ஆபாஸங்கள் கலந்தபோதிலும் மதக்காவலராய்த் தோன்றிய மகாபுருடர்களென்ற சுகாதார உத்தியோகஸ்தர்கள் அதற்கு வேறு கால்களைக் கட்டி அங்கு திருப்பி இதைக்கெடுக்காமல் ரக்ஷணம் செய்து விட்டார்களென்பதை அறியவில்லை போலும், ஆனால் மொத்தத்தில் பார்த்தால் கங்காநதியைப் போல் நன்மையையே பயக்குகிறதென்று சொல்லிவிட்டார். ஆகவே, கங்கையில் சாக்கடைக்கழிவை நாம் தள்ளியபோதிலும் அதனால் அது கொஞ்சமும் கெடுகிறதில்லை. மற்று அதன் ஸ்வரூபத்தையும் துர்வாஸனையையும் போக்கித் தனது திவ்யரூபத்தையும் ஸத்வாஸனையையும் கொடுத்துக்கங்கா தீர்த்தமென்றே கொண்டாடும்படி ஸாயுஜ்ப பதவியைக் கொடுப்பது போல் நமது கெட்ட புத்தியென்ற ஆபாஸச் சாக்கடையான பாபமனதை இந்து மதமே சரணமென்று தள்ளிவிட்டால் அது புனிதமாய் ஆய்விடுமேதவிற இந்து மதம் மொத்தத்திலும் கெடாது. சில்லறையிலும் கெடாதென்பது திண்ணம். பிறகு ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொரு விதமான ஆசாரம். ஆனால் ஆசார அனுஷ்டானங்கள் மட்டும் மதமாகிவிடாது வழக்க பழககங்கள் மாறும் இயல்புடையன. ஆனால் மதம் மாறாது என்கிறார். இது சரியானால் ஆசார அனுஷ்டானங்கள் மட்டும் மதமாகிவிடாது என்பது மிகவும் பொருத்தமே. ஒவ்வொன்றும் சேர்த்துத் தான் மதமென்னும் அங்கியேற்படும். தேசம்தோறும் ஆசார அனுஷ்டானங்கள் வேறுபட்டிருந்தாலும் வேதசாஸ்திர விரோதமின்றியிருப்பது தான் ஏற்றுக் கொள்ளத்தக்கது.

ஹிந்துமத பக்தர்கள் காட்டக்கூடிய தன்னடக்கத்தையே ஹிந்து மதத்தின் புனிதத்தன்மையைப்பொறுத்திருக்கிறது. மதத்திற்கு ஆபத்து வந்த போதெல்லாம் ஹிந்துக்கள்கடுமையான பிராயசித்தம் செய்திருக்கிறார்கள் என்கிறார். இது இந்து மதத்

தில் மட்டிலும் அல்ல, எல்லா மதத்திற்கும் ஸாதாரண தர்மம்தான். இது எதற்காகச் சொல்லப்பட்டதோ பிறகு சாஸ்திரங்கள் வளரும் தன்மையுடையன என்கிறார். இது என்ன அபிப்ராயத்தோடு சொல்லப்பட்டிருக்கிறதோ உண்மையில் சாஸ்திரம் வளரும் தன்மையுடையதென்றால் மாறுபடாமல் மரம்போல் ஆதிகுணங்களோடு மாறாமல் விரியும் தன்மையுடையதென்பது தான் பொருள்.

பிறகு வேதங்கள் உபனிடதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் இதிகாஸங்கள் முதலியவை ஏககாலத்தில் தோன்றியவை யல்ல. ஒவ்வொரு சமயத்தில் உண்டான அவஸரத்தால் ஒவ்வொன்றும் ஏற்பட்டது. ஆகையால்தான் வெளிப்பார்வைக்கு அவை மாறுபட்ட கருத்துடையன போல் காணப்படுகின்றன என்கிறார். இவ்விதம் சொல்வதைப் பார்த்தால் மத விஷயம் இன்னதென்றும் வேதசாஸ்திரமின்னதென்றும், கொஞ்சமும் அறியவில்லையென்பதைக் காட்டுவதுபோலாகிறது. வேதம் உபநிஷத் ஸ்மிருதி புராணம் இதிகாஸம் என்று எல்லாவற்றையும் கலந்துகட்டி அடித்து விட்டார். வேதம் அபௌருஷேயம் அதாவது ஒருவராலுமியற்றப் படாதென்பதைக் கேட்டறியவில்லை. இவைகள் வேறுகாலத்தில் தோன்றியவை என்பதை ஏற்றுக்கொண்டாலும் அவஸாத்தாலேற்பட்டதென்கிறது அவ்வளவு ஒட்டாது. எல்லாம் வேதங்களின் கருத்தை விளக்க ஏற்பட்டனவே யொழிய வேறல்ல. வேறுல்பால் தோன்றுவதும் ஸகஜம் தான். அத்வைத நிலை வருமளவும் பின்னமாவே தோன்றும். பிறகு ஸத்தியம் ஒன்றுதான். இப்புத்தகங்கள் புதிதாக எதையும் எடுத்துச் சொல்லவில்லை. ஆனால் அந்தந்தக் காலத்தில் எப்படி ஜனங்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மேற்படி நூல்கள் வெளிப்படுத்துகின்றனவென்கிறார். ஸத்தியம் ஒன்றுதானென்றும் அஸத்தியம் பல மாறுதல் பெருகின்றன வென்பதை பாமரனும் அறிவான். ஆனால் அந்தந்தக்காலத்தில் ஜனங்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்களென்பதைக் காட்டுகின்றன வென்கிறார். இது மதமறிந்தவர் சொல்லும் கூற்றல்ல. ஸ்மிருதிகள் பொதுவாய் ஆசார அனுஷ்டானங்களைப் பேதமின்றிக் காட்டுகின்றன. புராணங்களும் அக்கால அனுஷ்டானத்தைக் கூறவில்லை. மற்று தர்மதத்துவத்தை ஒரே மாதிரி போதிக்கவந்தன, அக்கால

அனுஷ்டானம் எப்படி இருந்ததவென்பதை நாம் ஊகித்தறிய வேண்டுமே தவிற வெளிப்படையாய்க் காணமுடியாது. பிறகு ஒரு காலத்திற்கு ஒரு வழக்கம் சௌகர்யமாய் இருந்திருக்கலாம். ஆனல் எக்காலத்துக்கும் அதே இருந்து வருவதென்றால் அது அபிவிருத்தியைத் தடைப்படுத்தும். மிருகபலி ஒரு காலத்தில் நடந்தது என்பதற்காக அதை நாம் இப்போது மீண்டும் ஆரம்பிக்கலாமா மாட்டிறைச்சி சாப்பிட்டோமென்பதற்காக இப்போது மீண்டும் சாப்பிடுவதா? ஒரு காலத்தில் திருடர்களின் கை கால்களை வெட்டிவந்தோம் என்பதற்காக அந்த அநாகரீகவழக்கத்தை மறுபடி கையாளுவதா என்கிறார். இதைப் பாருங்கள், முதலில் நம் மததத்துவத்தை அறிந்தவர்கள் பாதிரிமார்களும் உத்யோகஸ்தர்களுமென்றாரே. அதைத்தான் இவரும் தெரிந்துகொண்டிருக்கிறார். அவர்கள் இந்த ரகஸ்யத்தை எந்த சாஸ்திரத்திலிருந்து தெரிந்து கொண்டார்களென்பதை இப்போது கூறுகின்றேன். மேற்றிசை நிபுணர்கள் நம் இந்துதேசசரித்திரம் எழுதியிருக்கிறார்கள். அது தான் இப்போதும் கலாசாலைகளில் பாடமாய்க் கற்பிக்கப்பட்டு வருகின்றது. அதில் இருக்கும் உளருபடிக்கும் ஆபாஸத்திற்கும் எல்லை இல்லை. அந்த சாஸ்திரத்தைத்தான் நமது சாஸ்திரமென்றே இன்னும் நம் லௌகிகர்களுள் பெரும்பாலும் எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

அதுபோல் இவர்களும் எண்ணிக்கொண்டிருப்பது ஸகஜம் தானே. உண்மையில் அதல்ல. இங்கு பாருங்கள். ஒரு காலத்திற்கு ஒருவழக்கம் சௌகர்யமாய்இருந்திருக்கலாம். எக்காலத்திற்கும் அதே இருந்து வருவதென்றால் அது அபிவிருத்தியைத் தடுக்கும் என்கிறார். அதற்கு உதாரணமாக மிருகபலி ஒருகாலத்திற்கு ஸௌகர்யமாய் இருந்ததென்றால் அதை இப்போது மீண்டும் ஆரம்பிக்கலாமாவென்கிறார். மிருக பலி முன்காலத்தில் என்ன ஸௌகர்யமுள்ளதாய் இருந்தது, இப்போது மீண்டும் ஆரம்பிக்கிறதா வென்கிறாரே இப்போது எங்கும் நிறுத்தப்பட்டுவிட்டதோ. இது நமது மதவிஷயம். மிருகபலி ஒரு நாளும் நிறுத்தப்படவில்லை. ஆனல் அது சாஸ்திரீயம் என்றாலும் யாவருமனுஷ்டிக்கக் கூடியதல்ல, மற்று.

मांसाशनं ये कुर्वंति तैः कार्यं पशुहिंसनम् ।
महिषाजवराहाणां बलिदानं विशिष्यते ॥
देव्यग्रे निहता यान्ति पशवस्स्वर्गमव्ययम् ।
न हिंसा पशुजा तत्र निघ्नतां तत्कृतेऽनघ ॥

18கைகளோடோ அல்லது முற்கூறப்பட்ட ரூபமுள்ள தேவியின் முன்னில் பசு ஹிம்ஸை செய்யலாம். எவர்கள் மாமிசம் புசிக்கின்ருரோ அவர்கள் தான் செய்யலாம். அப்படிச் செய்யப்படும் பசுக்களுக்கும் நற்கதியுண்டென்றும் அது ஹிம்ஸாதோஷத்தில் ஏற்படாதென்றும் தேவீபாகவதம் 3-வது ஸ்கந்தம் 26-வது அத்தியாயத்தில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே அவ்வித மூர்த்திகளை உபாஸிக்கும் யாவரும் செய்து தானக வேண்டுமென்பதல்ல. மற்று வீணுப் மிருகங்களை வதைத்துத் தின்பவனைப் பார்த்துத் தேவியின் முன்னில் செய்தாவது சாப்பிடட்டும், இரண்டிற்கும் நற்கதி ஏற்படட்டுமென்று பரமகருணையுடன் கூறியிருக்கிறது. ஆகவே இப்போது இதை அனுஷ்டிப்பதாவென்று வெகு பரிதாபத்துடன் கேட்பதற்கு விஷயமே இல்லை. பிறகு ஒரு காலத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்டோமென்பதற்காக இப்போது மீண்டும் சாப்பிடுவதாவென்கிருர். இது தேச சரித்திர சாஸ்திர மூலமாய்ப்படித்தால் தான் இவ்விதம் கேட்கிறது.

உண்மையாய் நமது சாஸ்திரமறிந்தவர்கள் மூலம் கேட்டறிந்திருந்தால் இவ்விதம் கேட்கமாட்டார். மாமிசம் நம் முன்னேர்கள் ஏதோசில விதி ரூபமான கார்யத்தில் தூண்டப்பெற்று மட்டிலும் சில சமயங்களில் ஏற்றுக்கொண்டனர். அதை அவர்கள் தபஸ் முதலிய வீர்யமற்ற இக்கலியுகத்தில் வேண்டாமென்றே தடுத்திருக்கிருர்கள். ஆகவே அவர்களும் நம்மைப் போல்தானென்று சொல்லமுடியாது. அவர்கள் நிக்கிரகானுக்கிரக சக்தி பரிபூர்ணர்கள் அவர்களுக்கும் நமக்கும் இணை இல்லை. ஆனதால், இப்போது மீண்டும் சாப்பிடுவதாவென்று கேட்பதே தவறு. அப்படிச் செய்தால் பாவம். பிறகு ஒரு காலத்தில் திருடர்களின் கை கால்களை வெட்டிவந்தோம் என்று இப்போது அனுகரிக வழக்கத்தை ஆரம்பிப்பதாவென்கிருர். இது பச்சைப் பாலன் தன் தகப்பனைப்பார்த்து நீ மட்டிலும் செய்கிருயே நான்

செய்யக்கூடாதோவென்று கேட்பது போலிருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் மிகக்கடோரனான அரசன் ஓர் செய்கை செய்திருந்ததாய் தேசசரித்திரசாஸ்திரத்தில் எழுதிவைத்திருந்தால் அது பொது அனுஷ்டான சாஸ்திரமென்று யார் நம்பச்சொன்னர். ஸ்ரீராமர் முதலியவர்களின் காலத்தில் இவ்விதம் நடந்ததாய் ராமாயணம்முதலியதிலிருக்கிறதா. யாக்ஞவல்கியர்முதலியவர் திருடனைத் தண்டிக்கும் விஷயத்தில் இவ்விதம் கூறியிருக்கின்றனரா. ஒன்றுமில்லை. ஆகவே இவ்விதம் சொல்வதும் அழகல்ல. ஒரு ஸ்திரீ அநேகம் புருஷர்களை மணக்கும் வழக்கத்தை மீண்டும் ஆரம்பிப்பதா என்கிருர். இது நமது சாஸ்திரத்தில் ஓரிடத்திலும் கூறப்படவில்லை. அவ்விதமனுஷ்டானமும் கிடையாது. ஒரு சமயம் பாண்டவர்களை நினைத்துக்கொண்டு சொல்லும்பக்ஷத்தில் அதற்கு சமாதானம் பாரதத்திலேயே இருக்கிறதைப் பெரியோர்களின் மூலமறிந்து கொள்ளட்டும். பிறகு பால்யவிவாகத்தை யதோக்தமாய் நடத்துவதாவென்கிருர். ஐயோ, பாவம்! இதையெல்லாம் தான் நம் மதத்தின் ஆபாஸம் என்று நினைத்தார் போலும். இருக்கட்டும். பால்யவிவாகத்தைச் சாஸ்திரப்படி யதோக்தமாய்த்தான் நடத்தவேண்டும். இது எல்லா வருணத்தவர்க்குமல்ல. பிராமணர்களுக்கு மட்டும் முக்கியம். ஒரு காலத்தில் ஜனசமூகத்தின் ஓர் பிரிவை நாம் விலக்கி வைத்தோம் என்பதற்காக அவர்களுடைய பின் ஸந்ததியார்களையும் ஜாதிப் பிரஷ்டர்களாக பாவிப்பதாவென்கிருர். ஒரு காலத்தில் நம் முன்னோர்கள் அவன் பதிதனுவதற்குரியகெட்டகன்மங்களைச்செய்திருந்தால்பிராயச்சித்தத்திற்கும் அர்கனல்லாவிடில் அவனைப் பதிதனென்று ஜாதியிலிருந்தும் விலக்கிவிடுவார்கள். அத்தகைய தீயச்செயல் உள்ளவன் அத்தொழிலேயே செய்து கொண்டிருந்து ஸந்ததி விருத்தி செய்து கொண்டிருந்தால் அச்சந்ததியாரும் அவன்போல் பதிதனென்று சொல்வதற்கு ஸம்சயமென்ன. ஆனல் கேட்பவரின் அபிப்ராயம் இதல்ல. நாம் தீண்டாதவர்கள் என்றுவைத்திருப்பவர்களை நம் முன்னோர்கள் ஏதோ காரணத்தினல் பிரித்தார்களென்றும் அவர்களது ஸந்ததியை நாம் ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்றும் கேட்கிருர். அவ்விதமாயின் இதைப்பற்றி இங்கு அவர் கேட்க நியாயமில்லை. பகவானிடத்தில் மனுச்செய்துகொள்ளட்டும். ஆனல் உண்மையில் தீண்டாதவர்களை

நம் முன்னோர் பக்ஷமாய் நடத்தி இருப்பதை நம் பெரியோர்களிடம் கேட்டால் அதன் உண்மை விளங்கும். இதைப்பற்றின எத்துணையோ விஷயங்கள் இப்பத்திரிகை மூலம் வெளிவந்திருப்பதால் இப்போது மேற்செல்வாம். பிறகு குட்டை ஜலத்தைப் போல் ஒரே ரீதியில் இருப்பதை ஹிந்துமதம் வெறுக்கிறதாம். இது உண்மை. நமது இந்துமதம் ஸமுத்திரத்திற்கொப்பானது. கல்வி ஞானத்திற்களவில்லையாம். அளவு உண்டென்று யார் சொல்லுகிறார். ஆன்மசக்தியைப்பற்றிய ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்துவருகிறதென்கிறார். அதுதானில்லை. ஒருசமயம் ஆன்மசக்தியென்பதற்கு புத்திசக்தி என்று நினைத்தால் அது ஒருசமயம் ஏற்கும். அதுவும் முன்னோர்களுடையதுபோலல்லாது பொருள் உயிர்நாசத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இப்போது வேதங்கள் என்ற பெயரால் அழைக்கப்படுவது உண்மையான வேதத்தின் லக்ஷத்தில் ஒருபங்குகூட இல்லையென்கிறார். இந்த உண்மையை மட்டிலும் எங்கேயோ கேட்டறிந்திருக்கிறார். ஓர் மகருஷி அனேக ஆயிரவருடங்களாய்த் தவத்தினால் ஆயுள்பெற்று வேதாத்யயனம் செய்தனராம். பிறகு இந்திரனைப் பார்த்து நான் இப்போது வேதம் முழுமையும் கற்றுவிட்டேனென்றார். அதற்கு இந்திரன் மூன்று பெரிய மலைகளைக்காண்பித்து அவைகளில் ஒவ்வொன்றிலிருந்து ஓர் பிடியை எடுத்து ஓ மகருஷியே! இத்தனை ஆயிரம் வருடங்களாய் நீர் கற்றறிந்தது இப்பிடிகள் தான். பாக்கி இதோ மூன்று மலைகளிருக்கின்றனவென்றனராம். ஆகவே லக்ஷத்தில் ஒருபங்கு என்று சொன்னதுகூடப்போதாது. பிறகு ஸனாதனி இந்து அஷ்டாக்ஷரத்தை சுத்த ஹ்ருதயத்துடன் ஜபிக்கவேண்டுமென்று முடித்துவிட்டார். இவ்விதம் ஸனாதனி ஹிந்துவென்பாரோ இவ்விதமானால் புதுஹிந்து எப்படியிருப்பானோ. இவ்வளவுக்கும் காந்தி அவர்கள் தகுந்தபடி பதிற்கூறாமல் ஏதோ வழவழவென்று கூறியிருப்பதுபற்றி நான் கூறினேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

பூஜித்து வருவான். பின்னர் என் ஆக்ஞையினால் § யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டு குடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்த பயறு, கங்கைமணல், கங்காதீர்த்தம், குடை இவைகளைத் தருவான். அவைகளை நீ பெற்றுக்கொண்டு உடனே மழையின்றி வறுமை அடைந்திருக்கும் காசிக்குச் சென்று அன்னதானத்தால் அவ்வறுமையைப் போக்கி அன்னபூரணி என்று பெயர்பெற்று யாவரும் புகழப் பன்னிரண்டு வருஷம் அவ்விடத்திலிருந்து எத்திசையினும் மிக்க தென்திசையை நோக்கிச் செல்லக் கடவாய், அப்படிச் செல்லும்பொழுது புலித்தோல் சோம விருத்தமாயும், குடம் ஆதார பீடமாகிய அதன் சூத்திரமாயும், மணல் இலிங்க ரூபமாயும், ருத்திராக்ஷமாலிகை பில்வமாலையாயும், குடை நாகாபரணமாயும், யோகதண்டம் திரிசூலமாயும், சாமரைகள் இரண்டு பெண்களாகவும், விசிறி கிளியாகவும், குடம் குடதீபமாயும், புத்தகம் காமதேனுவாயும், வித்யாதாரம் ஊசியாயும், வறுத்த பயறு முளையோடு கூடினதாயும், கங்கை பாலாயும் † எந்த இடத்தில் மாறுகின்றனவோ ¶ அந்த இடத்தைக் காஞ்சி க்ஷேத்திரம் என்

---

§ योगदण्डं साक्षमालां दीपाधारं घटद्वयम् ।
व्यजनं चामरद्वन्द्वं विद्याधारं च पुस्तकम् ॥
व्याघ्रासनं तप्तमुद्गं गङ्गासैकतमेव च ।
गङ्गातीर्थं च छत्रं च गृहीत्वाच मनोन्मनिम् ॥

இவற்றால் யோகதண்டம் முதலியன தந்தமைய காண்க

† यत्र व्याघ्रासनं सोमवृत्तं तत्सूत्रकं घटम् ।
सैकतं लिङ्गरूपं च जपाक्षो बिल्वमालिका ॥
नागभूषणकं छत्रं त्रिशूलं योगदण्डकम् ।
चामरं युवतीयुग्मं व्यजनं च सुरूपकम् ॥
घटदीपद्वयं वह्निरूपं धेनुश्च पुस्तकम् ।
विद्याधारं सूचिकां च तप्तमुद्गं च सांकुरम् ॥
गङ्गातीर्थं पयोरूपं भवेद्यत्र मनोन्मनि ।

இவற்றால் வியாக்ராஸநம் முதலியன மாறினமை காண்க

¶ तत्काचिनगरं विद्धि तत्र सोमसुभर्तृके ।
सूत्रे तत्सैकतं लिंगं बिल्वमालासमन्वितम् ॥

றறிவாயாக. சோம சூத்திரத்துடன் கூடிய அவ்விடத்தில் அவ்விலங்கத்தை நாடொறும் க்ஷீரத்தால் அபிஷேகம்செய்து நாகாபரணத்தால் எழுந்தருளச் செய்து பில்வமாலையைச் சாத்தி முளைத்த பயறை நிவேதனம் செய்து தியானித்து, ‡ பக்கங்களில் இரண்டு ஸ்திரீகளைக் காவலாக வைத்து கோக்ஷீரத்தைப் பானம் செய்து கிளியைக் கையில் பிடித்துக்கொண்டு பஞ்சாக்னியை வளர்த்தி அதன் மத்தியில் ஊசியை நாட்டி அதன் முனையில் நின்று என்னைத் தியானித்துத் தவம் செய்து வருவாயாக. அப்பொழுது நான் உனக்குப் பிரத்யக்ஷமாகிக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன், அக்கணமே நீ கருமை நிறம் நீங்கப் பெற்று ஸ்வர்ணரூபத்தை யடைவாய்" என்று கூறிய வாய்மொழிகளைக் கேட்டாள். பிரதக்ஷண நமஸ்காரங்களைச் செய்து விடைபெற்று அவர் ஆணையின்படியே பதரிகாச்சிரமத்திற் சென்று காத்தியாயன முனிவரை மகிழச்செய்து அவரால் யோகதண்டம் முதலியவைப் பெற்றுக் காசியை அடைந்தார். அன்னதானம் செய்து காசிராஜனுக்கு மோக்ஷமளித்து ஸ்ரீ காஞ்சியை அடையவேண்டும் என்றெண்ணி வரும்பொழுது யோகதண்டம் முதலியவை மாறினமைக் கொண்டு 'இது தான் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரம் என்றுதெளிந்து, ஒவ்வொரு மா விருக்ஷத்தின் அடியிலும் பெருமானுரைத் தேடித் தேடிக் காணமல், முடிவில் ஒரு மா விருக்ஷத்தின் அடியில் கைலாசத்தில் தமது நாயகரால் சொல்லப்பட்டவண்ணம் இருக்கக்கண்டு ஆனந்த பாவசத்தோடு ஆச்சரியமடைந்து பூஜித்து தவம் செய்துவந்தனர். அனேக நாட்சென்றும் அவர் அருள்விரியாமையால் உக்கிரமான தவத்தைச் செய்துவரும் நாளில் ஒரு நாள் தீர்த்த யாத்திரையாய்

---

नागभूषणसंयुक्तं नित्यं क्षीराभिषेचितम् ।
मुद्गांकुरं च नैवेद्यं कृत्वा ध्यात्वा तु शांभवि ॥

இதினால் பூஜிக்கவேண்டிய முறைமை கூறினவை காண்க

‡ पार्श्वयोर्वनिते स्थाप्य गोक्षीरैस्स ......... ।
करे धृत्वा शुकश्रेष्ठं पञ्चाग्नौ सूचिकोपरि ।
स्थित्वा मां ध्यायती भक्त्या तपः कुरु सुदुश्चरम् ॥

இவற்றால் தவம் செய்யும் முறைமை கூறப்படுகின்றது.

வருகின்ற நாரதமுனிவர் அவ்விடம் வந்தபொழுது நைஷ்டிகத்வத்தோடும் கூடியிருக்கின்ற கௌரியைப் பார்த்து, அவரைத் தவம் செய்யும்காரணத்தைக் கேட்டு மிகவும் அன்புடையவராய், "ஹே அம்பிகே உனக்குக் காமேஸ்வராகிய பெருமானுர் சீக்கிரத்தில் பிரத்யக்ஷமாகும் வண்ணம் ஓர் மந்திரத்தை உபதேசிக்கின்றேன் என்று பஞ்சபாண மந்திரத்தை உபதேசித்து விடைபெற்று தென் திசையை நோக்கிச் சென்றனர்.

அதன் பின்னர், அம்பிகை அம்மந்திரத்தைத் தம்முடைய ஜன்ம நக்ஷத்திரமாகிய பூர நக்ஷத்திரம் தொடங்கி ஆறுமாதகாலம் வரையில் விடாது ஜபித்துத் தவம் செய்து வர, அப்பஞ்சபாண மந்திரோச்சாரணையினுலுண்டாகிய அக்னி கைலாஸத்திற் பரவி வீசிற்று, அப்பொழுது சிவபெருமானுர் இவ்வக்கினி ஜ்வாலை தேவியினல் செய்யப்பட்ட காமமந்திரத்தினுலுண்டாகிய அக்னிஎன்றும் இதுஒருவராலும் தடுக்கமுடியாதென்றும் ஆலோசித்து அவரவர் வேண்டியாங்கு அருள் புரியும் காமாரியாகிய அப்பெருமானுர் அம்மையாற் வேண்டியவாறே பஞ்சபாண மந்திரங்கட்கு உட்பட்டுக் காமமேலிட்டவர் போன்று யோகினி கணங்களோடு கூடி லீலா விநோதம் புரிந்தும் அடங்கப் பெருதவராய்ச் சற்றே திருவுளத்துட் பரிபவமுற்றுத் தமது திருமுடியில் வசிக்கும் கங்கையைப் பெருக்கி அவ்வெள்ளத்தில் மூழ்கிச் சிறிது சுகமுற்று மீளவும் அக்கங்கையைப் பார்த்து "உனது உருவமாகிய ஜலத்தில் மூழ்கியும் எனக்குண்டாகிய காமாக்கினி சிறிதேனும் தணியவில்லையாகலான் நீ பார்வதி தவம் புரியும் இடத்திற்கு மஹாபிரளய ரூபிணியாய்ச் சென்று அவளது மந்திரஜபத்தைத் தடுப்பாய்" என்ன, உடனே கங்கையானவள் அப்பெருமானுடைய ரோமங்களிலிருக்கும் மூன்றரைகோடி தீர்த்தங்களையும் ஆகரிஷித்துக்கொண்டு அத்தீர்த்தங்களுட் கலந்து வியாபகராய் வரும் சிவ பெருமானுரை ஹ்ருதயகமலத்திலிருத்தித் தியானம் செய்து மீளவும் சிதள ஸ்வரூபிணியாய் அதிவேகமாய்ப் பேரலைகளோடு நந்திசைலம் என்கிற மலையை அடைந்து அங்கிருந்து எகமுகமாய் மஹாதேவி தவம் புரியும் இடத்தை நோக்கி வந்தனள். அதனை உமாதேவியார் பார்த்து கம்பம் கம்பம் (பயம், பயம்) என நடுக்கமுற்று அப்பிரளயத்தைத் தடுக்க எண்ணித் தமது தோழியருள் ஒரு சக்தியைப் பார்த்து,

"ஹே தோழி, இவ்வெள்ளத்தைப் பார்த்தனையா? இதனைப் பார்க்கும் பொழுதே எனக்கு அதிக பயங்காமாக இருக்கின்றது. இதனை நீ பந்தனை செய்வாய்" என்று ஏவ, அந்தக் காளி அவ்வெள்ளத்திற் கெதிரே நின்று தன் கையிலிருந்தவிச்வ பக்ஷணம்என்னும் கபாலத்தில் அப்பெருவெள்ளத்தை வெளியே போகவிடாமல் அந்த க்ஷணமே உள்ளடக்கினள்.

பின்னர், அம்பிகை தனக்கு வந்த விக்கினத்தைப் போக்கிய அத்தோழியினிடத்தில் அதிகப் பிரீதியுடையவராய் "நீ மஹா பிரளய பந்தனி" என்று யாவராலும் புகழப்படுவாய்" என்று அருள் செய்தனர். பின்னர், காமேசர் கபாலத்தில் அடங்கி இருந்த வெள்ளத்தை ஆயிரமுகத்தோடு மகா பிரளயமாய் வெளியே வரச்செய்தனர். உமாதேவியார் கபாலத்தில் அடங்கியிருந்த வெள்ளம் பெருகி வருவதைக்கண்டு 'இது பிரளய பந்தனியினால் தடுக்க முடியாதது' என்று பயந்து தனது சகோதராகிய விஷ்ணு மூர்த்தியை நினைக்க, அவர் உமாதேவியார்க்கு உண்டாகிய பயத்தைப் போக்கும் பொருட்டு பூமியில் பாதங்களும் ஆகாயத்தில் முடியுமாக இருக்கும் பேருருக்கொண்டு தனது கண்டத்தில் சந்திரகிரணம் விளங்க, அவ்வெள்ளத்தைத் தடுப்பார் போன்று நின்றனர். அவரைக்கண்ட உமாதேவியார் தமது நாயகராகிய சந்திரசேகரர் என நிச்சயித்து நடுக்கமுற்றபொழுது, சந்திரகண்ட விஷ்ணுமூர்த்தி கௌரியைப் பார்த்து, "யான் சந்திரசேகரனன்று; அவரருளால் சந்திரகலை கண்டத்தில் வீசப்பெற்று சந்திரகண்டன் என்று இங்கு வாழ்கின்ற உனது தமயன்" என்று தன்னைத் தெரிவித்து "ஓ, சங்கரி, இந்த வெள்ளம் வெள்ளமன்று. இது சாக்ஷாத் சங்கரருடைய ஸ்வரூபம், அவர் உன்னைச் சோதிக்கும் பொருட்டு இவ்வாறு வந்தனர். ஆகையால் நீ பக்தியுடன் அவரையே துணை என நம்பி உன்னால் பூஜிக்கப்பட்டு வரும் இந்தச் சைகதலிங்க மூர்த்தியைச் சரணமடைந்து ஆலிங்கனம் செய்துகொள்வையேயாயின் அக்கணமே கங்காதராகிய சங்கரர் பிரசன்னராய்க் கருணை கூர்ந்து மகிழ்ந்து, பிரளயத்தை மாற்றிக் கலியாண சுந்தராய் உன்னை விவாஹம் செய்து கொள்ளுவார். இது நிச்சயம் என்று கூறி ஏகாம்பரநாதருடைய எதிரில் முன்போல் தானிருக்கும் இடத்தில் சந்திரகண்டராய் நின்றனர்.